# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

Reg.No

## பதினொன்றாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மணி | மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

20 x 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. நிதித்தகவல்களின் அகப் பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   a) கடனீந்தோர் b) பணியாளர் c) வாடிக்கையாளர் d) அரசு
2. இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   a) இந்திய மைய வங்கி
   b) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
   c) உச்ச நீதி மன்றம்
   d) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
3. சொத்து கணக்கு கையாள்வது
   a) தனிப்பட்ட நபர்கள் b) செலவுகள் மற்றும் இழப்புகள்
   c) சொத்துகள் d) வருமானம் மற்றும் இலாபங்கள்
4. கு.ப.எ. என்பது
   a) பேரேட்டு பக்க எண் b) குறிப்பேட்டு பக்க எண்
   c) சான்று சீட்டு எண் d) ஆணை எண்
5. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடங்கி இருக்கும்?
   a) ஆள்சார் கணக்குகள் மட்டும் b) சொத்துக் கணக்குகள் மட்டும்
   c) பெயரளவு கணக்குகள் மட்டும் d) அனைத்து கணக்குகளும்
6. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
   a) ஆண்டு இறுதியில் b) ஒரு குறிப்பிட்ட நாளில்
   c) ஒரு பருவகாலம் முடிந்ததும் d) இவை ஏதும் இல்லை
7. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்வது
   a) அனைத்து சரக்குகளின் கொள்முதல் b) அனைத்து சொத்துகளின் கடன் கொள்முதல்
   c) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
   d) அனைத்து சொத்துகளின் கொள்முதல்
8. ரொக்க ஏடு ஒரு
   a) துணை ஏடு b) முதன்மை ஏடு
   c) உரிய குறிப்பேடு d) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்
9. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிக்கப்படுவது
   a) வங்கியால் b) வணிகத்தால்
   c) வணிகத்தின் கடனாளிகளால் d) வணிகத்தின் கடனீந்தோரால்
10. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
    a) முதல் கணக்கிற்கு b) வியாபாரக் கணக்கிற்கு
    c) அனாமத்துக் கணக்கிற்கு d) இலாப நட்டக் கணக்கிற்கு
11. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியைக் கூலிக் கணக்கில் பற்று வைப்பது
    a) பகுதி விடு பிழை b) விதிப்பிழை
    c) முழுவிடு பிழை d) இருமுறை பதிந்த பிழை

12. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
 a) காலப்போக்கு b) பயன்பாடு c) வழக்கொழிவு d) அ,ஆ மற்றும் இ
13. ஒரு சொத்து எதன் காரணமாக வழக்கொழிவு அடைகிறது?
 a) காலப்போக்கு b) தேய்வு மற்றும் உராய்வு
 c) தொழில்நுட்ப மாற்றங்கள் d) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை
14. வங்கி வைப்புகள் மீதான வட்டி
 a) முதலின வரவு b) வருவாயின வரவு
 c) முதலினச் செலவு d) வருவாயினச் செலவு
15. பின்வருவனவற்றில் எது நடப்புச் சொத்துக்களில் சேராதது?
 a) ரொக்கம் b) சரக்கிருப்பு c) அறைகலன் d) முன்கூட்டிச் செலுத்திய செலவு
16. முதலிடுகள் மீது கூடியுள்ள வட்டி தோன்றுவது
 a) இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கம்
 b) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கம்
 c) மேற்கண்ட இரண்டிலும் d) மேற்கண்ட எதுவுமில்லை
17. வெளியீட்டு சாதனத்திற்கு ஒரு உதாரணம்?
 a) சுட்டி b) அச்சுப்பொறி c) ஒளியியல் வருடி d) விசைப்பலகை
18. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
 a) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
 b) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
 c) உள் கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
 d) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
19. ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.2,000 வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ.50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின்படி இருப்பு என்ன?
 a) ரூ.1,950 வரவு இருப்பு b) ரூ.1,950 பற்று இருப்பு
 c) ரூ.2,050 பற்று இருப்பு d) ரூ.2,050 வரவு இருப்பு
20. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ரூ.1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ரூ.60,000 எனில், அந்நிறுவனத்தின் முதல் ________.
 a) ரூ.1,60,000 b) ரூ.60,000 c) ரூ.1,00,000 d) ரூ.40,000

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** 7 x 2 = 14

21. கணக்கியலை வரையறு.
22. பிழைத்திருத்தம் என்றால் என்ன?
23. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | | | | |
|---|---|---|---|---|
| a) சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| 1,00,000 | = | 80,000 | + | ? |
| b) சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
| 2,00,000 | = | ? | + | 40,000 |

24. 2017 ஜனவரி 1 இல் தொடங்கும் ஆண்டிற்கான தொடக்க இருப்பினை உரிய குறிப்பேட்டில் பதிவு செய்க.

ரொக்கம் ரூ.1,00,000 ; சரக்கிருப்பு ரூ.50,000

பற்பல கடனாளிகள் ரூ.30,000 ; பற்பல கடனீந்தோர் ரூ.20,000

25. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 'A' நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்க.

a) வங்கி அறிக்கையின் படியான வரவிருப்பு ரூ.6,000

b) தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் (NEFT) வாயிலாக வங்கியால் பெறப்பட்ட தொகை ரூ.3,500 ரொக்க ஏட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

c) மறுக்கப்பட்ட காசோலை தொகை ரூ.2,500 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை?

26. தேய்மானம் என்றால் என்ன?

27. நிறுவன தொடர்ச்சி அனுமானம் குறித்து சிறுகுறிப்பு வரைக.

28. கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (1.1.2018) | 10,000 |
| கொள்முதல் | 26,100 |
| விற்பனை | 40,600 |
| இறுதிச் சரக்கிருப்பு (31.12.2018) | 13,500 |

29. ஆயத்த மென் பொருள்களுக்கான உதாரணங்களில் ஏதேனும் இரண்டைத் தரவும்.

30. வருவாயினம் சார்ந்த ஒரு செலவின் பயனானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளிலும் தொடர்ந்து கிடைக்குமானால் அச்செலவு _______ வருவாயினச் செலவு ஆகும். ஏதேனும் இரண்டு உதாரணம் தருக.

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** 7 x 3 = 21

31. கணக்கியலின் பிரிவுகள் ஏதேனும் மூன்று சுருக்கமாக கூறுக.

32. இரட்டைப் பதிவு முறையின் நன்மைகள் ஏதேனும் மூன்று எழுதுக.

33. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| a) | 1,00,000 | = | 55,000 | + | ? |
| b) | ? | = | 50,000 | + | 40,000 |
| c) | 1,20,000 | = | ? | + | 30,000 |

34. பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து கொள்முதல் கணக்கு தயாரிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2018 டிச. | 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடைனுக்கு வாங்கியது | ரூ. | 17,800 |
| | 6 | மணியிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | ரூ. | 7,000 |
| | 21 | இரகுநாதனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | ரூ. | 10,000 |

35. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு - வேறுபடுத்தவும்.

36. நிலைச்சொத்து ரூ.1,00,000 க்கு வாங்கப்பட்டது. தேய்மான விகிதம் ஆண்டுக்கு 10% நேர்கோட்டு முறையில் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும்.

37. இருப்பாய்விற்கும், இருப்புநிலைக்குறிப்புக்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்று எழுதுக.

38. பிரதீப் ஏடுகளில் 31, டிசம்பர் 2018-ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத் திருப்பம் | 60 | இறுதிச் சரக்கிருப்பு | 860 |

39. பின்வரும் விவரங்களிலிருந்து தமிழ்அரசு என்பவரின் 2018 டிசம்பர் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிக்கட்டும் பட்டியலை தயார் செய்க.

a) ரொக்க ஏட்டின்படி இருப்பு ரூ.7,130

b) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ.1,000

c) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ.800

40. 31.3.2018 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.10,000

<u>சரிக்கட்டுதல்:</u>

வாராக்கடன் ரூ.300 போக்கெழுதவும்.

சரிக்கட்டுப் பதிவு தந்து இவ்விவரம் 2018 மார்ச் 31-ஆம் நாளன்றைய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. a) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

i) இராமன் ரூ.80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.

ii) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ரூ.30,000

iii) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ரூ.5,000

iv) இலட்சுமணனிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ரூ.5,000

v) கூடுதல் முதல் இட்டது ரூ.10,000

***(அல்லது)***

b) கீழ்க்கண்ட விவரங்கள் இருப்பாய்விலிருந்து பெறப்பட்டன. கடனாளிகள் ரூ.30,000; வாராக் கடன் ரூ.5,000.

<u>கூடுதல் தகவல்கள்:</u>

i) கூடுதல் வாராக் கடன் ரூ.3,000 போக்கெழுதவும்.

ii) 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரம் இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டவும்.

42. a) சூர்யா என்பவர் அறைகலன் வியாபாரம் செய்யும் வியாபாரி பின்வரும் நடவடிக்கைகளுக்கு ஜனவரி 2019-ல் குறிப்பேட்டினைத் தயாரிக்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | வியாபாரம் தொடங்க ரொக்கமிட்டது | ரூ. | 1,75,000 |
| 5. | X நிறுவனத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | ரூ. | 7,500 |
| 10. | வங்கியில் செலுத்திய ரொக்கம் | ரூ. | 10,000 |
| 15. | சொந்த பயனுக்காக வங்கியிலிருந்து ரொக்கம் எடுத்தது | ரூ. | 15,000 |
| 20. | சரக்குகள் (மேஜை விரிப்புகள்) அலுவலக பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது | ரூ. | 500 |

***(அல்லது)***

b) பின்வரும் விவரங்களிலிருந்து மோகன் நிறுவனத்தின் 2018 மார்ச் 31-ல் நாளன்றைய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

i) ரொக்க ஏட்டின்படி பற்றிருப்பு ரூ.10,500

ii) வங்கியில் செலுத்திய காசோலை ரூ.5,500 வங்கியால் வரவு வைக்கப்பட்டது. ஆனால் ரொக்க ஏட்டில் இருமுறை பதியப்பட்டது.

iii) விடுத்த காசோலை ரூ.7,000 செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது குறித்து ரொக்க ஏட்டில் பதிவு இல்லை.

iv) காசோலை புத்தகக் கட்டணம் ரூ.200 வங்கியால் பற்று வைக்கப்பட்டது. ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

v) பணம் வைப்பு இயந்திரம் வாயிலாக வாடிக்கையாளர் செலுத்திய ரூ.1,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை.

43. a) பின்வரும் நடவடிக்கைகளை நேரடியாக பேரேட்டில் எடுத்து எழுதவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2018 ஜூன் | 1 | மோகினி ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | ரூ. | 2,50,000 |
| | 6 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | ரூ. | 40,000 |
| | 8 | ராம் என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | ரூ. | 45,000 |
| | 15 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | ரூ. | 20,000 |

*(அல்லது)*

b) 2018 ஜூன் மாதத்திற்கான கோபி என்பவரின் பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டினைத் தயாரிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2018 ஜூன் | 2 | ரொக்கத்துடன் வணிகம் தொடங்கியது | ரூ. | 50,000 |
| | 8 | வாடகை ரொக்கமாகச் செலுத்தியது | ரூ. | 4,000 |
| | 10 | ரொக்கம் செலுத்தி அச்சுப்பொறி வாங்கியது | ரூ. | 7,500 |
| | 11 | ரொக்கக் கொள்முதல் | ரூ. | 15,000 |
| | 14 | ரொக்க விற்பனை | ரூ. | 10,000 |

44. a) சோமு என்பவரது ஏடுகளிலிருந்து 31.3.2018 அன்று எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 60,000 | விற்பனை | 82,000 |
| பெற்ற தள்ளுபடி | 3,250 | மின் கட்டணம் | 800 |
| கொள்முதல் | 58,000 | எடுப்புகள் | 5,250 |
| பொறி, இயந்திரம் | 40,000 | வாகனச் செலவுகள் | 1,200 |
| விளம்பரச் செலவுகள் | 5,000 | மகிழுந்து | 35,000 |

*(அல்லது)*

b) பின்வரும் நடவடிக்கைகளை முதலினம் மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.

i) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ரூ.75,000

ii) வங்கியிடமிருந்து பெற்ற கடன் ரூ.2,50,000

iii) முதலீடு விற்பனை செய்தது ரூ.1,20,000

iv) கழிவு பெற்றது ரூ.30,000

v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ரூ.1,400

45. a) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரியான குகன் என்பவரின் விற்பனை ஏடு மற்றும் விற்பனை திருப்ப ஏட்டில் பதிவு செய்க.

2018 மே 2 கரண் என்வருக்கு கடனுக்கு விற்றது
ஒன்று ரூ.280 வீதம் 100 துண்டுகள்
மீட்டர் ரூ.270 வீதம் 200 மீட்டர் சட்டைத் துணி

5 வீரன் என்பவருக்கு கடனுக்கு விற்றது
ஒன்று ரூ.1,500 வீதம் 10 ஆயத்த ஆடைகள்

16 ஜெயின் நிறுவனத்திடம் கடன் விற்பனை செய்தது
ஒன்று ரூ.240 வீதம் 50 போர்வைகள்

20 சேதம் அடைந்த காரணத்தினால் 10 துண்டுகள் கரணுக்கு திருப்பி அனுப்பியது. அதற்கான ரொக்கம் பெறப்படவில்லை.

25 கரண் என்பவருக்கு பழைய அறைகலன்களை கடனுக்கு விற்றது ரூ.18,000

27 தரம் குறைவு காரணமாக இரண்டு ஆயத்த ஆடைகள் வீரனிடமிருந்து திரும்பப் பெற்றது அதற்கு பணம் செலுத்தவில்லை.

*(அல்லது)*

b) சாந்தி அவர்களின் இருப்பாய்வு மற்றும் சரிக்கட்டுதல்களிலிருந்து 2018 ; 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு (1.4.18) | 900 | |
| கொள்முதல் | 2,000 | |
| விற்பனை | | 4,000 |
| கடன் (வட்டி 10%) | | 2,000 |
| கொள்முதல் மீதான ஏற்றிச்செல் செலவு | 200 | |
| வாடகைதாரரிடம் பெற்ற வாடகை | | 250 |
| கடன் மீது வட்டி | 100 | |
| இயந்திரம் | 400 | |

சரிகட்டுதல்கள்:

i) ஆறு மாத கால கடன் மீது வட்டி கொடுபட வேண்டியுள்ளது.

ii) ஒரு மாத வாடகை ரூ.25 வீதம் வாடகைதாரரிடமிருந்து 2 மாத வாடகை பெற வேண்டி உள்ளது.

iii) 2018 மார்ச் மாத சம்பளம் ரூ.75 கொடுபட வேண்டியுள்ளது.

iv) மார்ச் 31, 2018 அன்று இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.1,030

46. a) தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை?

*(அல்லது)*

b) ஒரு தயாரிப்பு நிறுமம், ஏப்ரல் 1, 2010 அன்று பொறி வகை மற்றும் இயந்திரம் ரூ.4,50,000 க்கு வாங்கி, நிறுவுதல் செலவாக ரூ.50,000 செலவழித்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு, அச்சொத்தானது ரூ.3,85,000 க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 15% நிலைத்தவணை முறையில் நீக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31-ல் முடிக்கப்பெறுகின்றன. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடவும். மேலும் இயந்திரக் கணக்கைத் தயாரிக்கவும்.

47. a) கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து முன்பண மீட்பு முறையில் பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2018 ஜுலை | 1 | காசாளரிடமிருந்து முன்பணம் பெற்றது | ரூ. | 2,000 |
| | 7 | மடல் ஏடு மற்றும் பதிவேடுகள் வாங்கியது | ரூ. | 100 |
| | 8 | வெள்ளைத்தாள்கள் வாங்கியது | ரூ. | 50 |
| | 10 | ஆட்டோ ரிக்ஷா கட்டணம் கொடுத்தது | ரூ. | 200 |
| | 15 | கூலி கொடுத்தது | ரூ. | 300 |
| | 18 | தபால் செலவுகள் செய்தது | ரூ. | 100 |
| | 21 | எழுதுபொருள்கள் வாங்கியது | ரூ. | 450 |

*(அல்லது)*

b) கீழ்க்காணும் பதிவுகளைத் திருத்துக.

| விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|
| i) கொள்முதல் க/கு ப | | 5,000 | |
| ரொக்க க/கு | | | 5,000 |
| (ரொக்கம் செலுத்தி அறைகலன் வாங்கியது) | | | |
| ii) நிலா க/கு ப | | 8,000 | |
| ரொக்க க/கு | | | 8,000 |
| (நிலாவுக்கு சம்பளம் கொடுத்தது) | | | |
| iii) குறளமுது க/கு ப | | 2,000 | |
| ரொக்க க/கு | | | 2,000 |
| (குறளமுதுக்கு வாடகை கொடுத்தது) | | | |
| iv) ரொக்கக் க/கு ப | | 9,000 | |
| விற்பனைக் க/கு | | | 9,000 |
| (ரொக்கத்திற்கு அறைகலன் விற்றது) | | | |
| v) ரொக்கக் க/கு ப | | 6,000 | |
| கோதை மலர் க/கு | | | 6,000 |
| (கோதை மலருக்கு ரொக்கத்திற்கு சரக்கு விற்றது) | | | |

******

**சரியான விடை: +1 Acc I Rev Key- Feb 2020**

1.(ஆ) பணியாளர்
2..(ஈ) இந்திய பட்டயக்கணக்காளர் நிறுவனம்
3.(இ) சொத்துக்கள்
4.(ஆ) குறிப்பேட்டு பக்க எண்
5.(ஈ) அனைத்துக் கணக்குகளும்
6.(ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
7.(இ) அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல்
8.(ஈ) துணைஏடு மற்றும் முதன்மைஏடு இரண்டும்
9.(ஆ) வணிகத்தால்
10.(இ) அனாமத்து கணக்கிற்கு
11.(ஆ) விதிப்பிழை
12.(ஈ) அ ஆ மற்றும் இ
13.(இ) தொழில்நுட்ப மாற்றங்கள்
14.(ஆ) வருவாயின வரவு
15.(இ) அறைகலன்
16.(இ) மேற்கண்ட இரண்டிலும்
17.(ஆ) அச்சுப் பொறி
18.(ஆ) ஆயத்தக் கணக்கியல் மென்பொருள்
19.(அ) ரூ1950 வரவு இருப்பு
20.(ஈ) ரூ 40000

**பகுதி-ஆ ஏதேனும் ஏழு வினாக்களுக்குவிடையளி: 7x2=14**

**21. கணக்கியலை வரையறு.** அமெரிக்க கணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன்மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்க தீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது".

**22. பிழைத் திருத்தம்** கணக்கு ஏடுகளிலுள்ள பிழைகளைத் திருத்தம் என்பது, தவறான எண்களையோ அல்லது எழுத்துகளை அடித்தலோ, திருத்தி எழுதலோ அல்லது மேல் எழுதலிலோ ஏற்பட்டுள்ள பிழைகளைச் சரியாக மாற்றுவது பிழைத்திருத்தம் எனப்படும். உரிய கணக்குகளில், தகுந்த குறிப்பேட்டுப் பதிவுகளையோ அல்லது விளக்கக் குறிப்பையோ எழுதி பிழைகளின் விளைவை மட்டுப்படுத்தலே பிழைத்திருத்தம் எனப்படும்.

| 23. சொத்துக்கள் = | முதல் | + பொறுப்புகள் |
|---|---|---|
| 100000 | 80000 | **20000** |
| 200000 | **160000** | 40000 |

**24. தொடக்க குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| ரொக்க க/கு ப. | 100000 | |
| சரக்கிருப்பு க/கு ப. | 50000 | |
| கடனாளி க/கு ப. | 30000 | |
| கடனீந்தோர் க/கு | | 20000 |
| **முதல் க/கு** | | **160000** |

**25. வங்கிச் சரிக்கட்டுப்பட்டியல்**

| விவரம் | | ரூ |
|---|---|---|
| வங்கிஅறிக்கையின்படி வரவிருப்பு | | 6000 |
| **கூட்டுக**<br>NEFT வாயிலாக பெறப்பட்டது<br>மறுக்கப்பட்ட காசோலை | | <br>3500<br>2500 |
| கழிக்க | | ---- |
| ரொக்க ஏட்டின்படி இருப்பு | | **12000** |

**26. தேய்மானம் வரைவிலக்கணம் ஸ்பைசர் மற்றும் பெக்லரின்** கூற்றுப்படி, "தேய்மானம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில், எக்காரணத்தாலும் ஏற்படும் ஒரு சொத்தின் பயனளிப்பு கால இழப்பைக் குறிக்கும் ஒரு அளவாகும்". ( அல்லது ) **கார்ட்டரின் கூற்றுப்படி,** "தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும், ஒரு சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்."

**27. நிறுவன தொடர்ச்சி அனுமானம்** ஒரு வாணிக நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்று இலாபமூட்டும் என்ற எதிர்பார்ப்பிலே நடத்தப்பட்டு வருகிறது. இக்கண்ணோட்டத்திலேயே நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன. நடவடிக்கைகளை பதிவு செய்யும் போது, கணக்கியலில் பயன்படுத்த விதிகள், நடைமுறைகள், கருத்துகள் மற்றும் கொள்கைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். ஆண்டுக்காண்டு கணக்கியல் முறையில், தொடர்ச்சியாக பின்பற்றினால் மட்டுமே பல்வேறு ஆண்டுகளின் முடிவுகள் ஒப்பிடத் தக்கவகையில் இருக்கும். உதாரணமாக சொத்து மீது தேய்மானம் ஒதுக்கப்படும்போது பல்வேறு முறைகளைப் பின்பற்றலாம். ஆனால் எந்த முறை பயன்படுத்தப்படுகிறதோ, அதுவே தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

**28. வியாபார க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ.சர | | 10000 | விற்பனை | 40600 |
| கொள்முதல | | 26100 | இறுதிசரக் | 13500 |
| மொ.இலாபம் | | **18000** | | |
| | | 54100 | | 54100 |

**29. ஆயத்த மென்பொருள்களுக்கான உதாரணங்களில் ஏதேனும் இரண்டைத் தரவும்.**

1.Tally 2. Busy 3. Marg 4. Profitbooks

**30.** (i) **நீள்பயன் வருவாயின செலவு** (ii) எ.கா: 1.விளம்பரத்திற்காக செய்யப்பட்ட பேரளவு தொகை 2) நிலைச்சொத்து மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவு

**பகுதி -இ ஏதேனும் ஏழு வினாக்களுக்குவிடையளி: 7x3=21**

**31. கணக்கியலின் பிரிவுகள் ஏதேனும் மூன்று. 1) நிதி நிலைக் கணக்கியல்** இது நிதியியல் நடவடிக்கைகளையும், நிகழ்வுகளையும் பதிவு செய்யக்கூடியது. இது வரலாற்றுத் தன்மையுடையது. ஏற்கனவே நடந்து முடிந்த நடவடிக்கைகளை மற்றும் நிகழ்வுகளை கணக்கேடுகளில் பதிவு செய்து பராமரிப்பதே நிதிநிலை கணக்கியலாகும். இது பயனாளர்கள் முடிவுகள் எடுக்க தேவையான நிதியியல் தகவல்களை தருகிறது **2) அடக்கவிலைக் கணக்கியல்** பொருட்கள் அல்லது சேவைகளின் அடக்க விலையைக் கணக்கிடுவதற்கு செலவு விவரங்களை சேகரித்து, பதிவு செய்து, வகைப்படுத்தி, செலவினங்களை ஒதுக்கீடு செய்வது அடக்க விலை கணக்கியல் ஆகும். மேலும் இது, செலவுகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வாக முடிவுகளை எடுத்தல் போன்றவற்றிற்கான விவரங்களையும் தருகிறது. **3) மேலாண்மைக் கணக்கியல்** கணக்கியல் தகவல்களை நிர்வாகத்திற்கு தருவதன் மூலம் முடிவு எடுப்பதற்கும், நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகளுக்கும் துணைசெய்வதே மேலாண்மைக் கணக்கியல் ஆகும். **4) சமூகப் பொறுப்பு கணக்கியல்** இது வணிக நிறுவனங்கள்

மற்றும் பிற நிறுவனங்கள் கணக்கியல் தகவல்களை சமூகத்தின் பார்வையில் வழங்குவதாகும். உதாரணமாக உள் கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவை தெரிவிக்கப்படும். **5) மனிதவளக் கணக்கியல்** இது ஒரு நிறுவனம், அதன் மனித வளத்தில் செய்த முதலீடுகளை இனம் காணுதல், அளவிடுதல், மற்றும் அறிவித்தல் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்

**32. இரட்டைப்பதிவு முறையின் நன்மைகள் ஏதேனும் மூன்று :1. துல்லியத்தன்மை.** வணிகத்தின் அனைத்து நடவடிக்கைகளும், இரு தன்மைகளோடு கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுகின்றன. இது கணக்கியலின் துல்லியத்தன்மையை பரிசோதிக்க உதவுகிறது. **2.வணிகமுடிவுகளை உறுதிப்படுத்துதல்.** வணிகத்தில் ஏற்படும் செலவுகள், இழப்புகள் வருமானங்கள், இலாபங்கள், சொத்துகள், பொறுப்புகள், கடனாளிகள், கடனீந்தோர்கள் பொன்ற விபரங்களை உடனுக்குடன் பெறமுடியும். இதன் உதவியால் ஒரு குறிப்பிட்ட கணக்காண்டின் நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் மற்றும் ஒரு குறிப்பிட்ட தேதியில் நிதி நிலையினைக் கணக்கிட முடியும். **3.ஒப்பீட்டு ஆய்வு** வணிக நிறுவனத்தின் தற்கால முடிவுகளை, முந்தைய ஆண்டுகளின் முடிவுகளோடும், வேறு பல நிறுவனங்களின் முடிவுகளோடும் ஒப்பிட்டு பார்க்க முடியும். இதன் மூலம் வணிகத்தின் எதிர்காலத் திட்டங்களை வகுக்க முடியும். **4.பொதுவான ஏற்புத்தன்மை** இம்முறையில் கணக்கினைப் பதிவு செய்வதை நிதி நிறுவனங்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஏனெனில், இது ஒரு முறையான, அறிவியல் பூர்வமானகணக்கு பராமரிப்பு முறையாகும்.

**33. கணக்கியல் சமன்பாடு**

| சொத்துக்கள் = | முதல் | + பொறுப்புகள் |
|---|---|---|
| 100000 | 55000 | **45000** |
| **90000** | 50000 | 40000 |
| 120000 | **90000** | 30000 |

**34.ப. கொள்முதல் க/கு வ.**

| நா | விவரம் | தொ | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| 2018டிச31 | பற்பல கடனீ க/கு | **34800** | | | |

| 35.அடிப்படை | முதலினச் செலவு | வருவாயினச் செலவு |
|---|---|---|
| தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது | அடிக்கடி நிகழும் தன்மை உடையது |
| நோக்கம் | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பது | வியாபாரத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வது |
| பயனளிப்பு காலம் | இச் செலவின் பலன், நீண்ட காலத்திற்கு கிடைக்கும் | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் தரக்கூடியது |
| இலாபம் ஈட்டும்திறனில் ஏற்படுத்தும் விளைவு | இலாபம் ஈட்டும் திறனைஅதிகரிக்கச் செய்யும். | இலாபம் ஈட்டும் திறனை, பராமரித்து வைத்துக் கொள்ள உதவும் |
| கணக்கியல் நடைமுறை | இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து பக்கத்தில் தோன்றும் | நேரடிச் செலவுகள் வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும், |
| | | மறைமுகச் செலவுகள் இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் தோன்றும் |

**36. நேர்கோட்டு முறை**

| | |
|---|---|
| நிலைச் சொத்து | 100000 |
| (-) முதலாமாண்டு தேய்மானம் | **10000** |
| | 90000 |
| (-) இரண்டாமாண்டு தேய்மானம் | **10000** |
| | 80000 |
| மொத்த தேய்மானத் தொகை | **20000** |

| 37.அடிப்படை | இருப்பாய்வு | இருப்புநிலைகுறிப்பு |
|---|---|---|
| 1 நோக்கம் | கணக்கியல்பதிவுகளின், கணக்கீட்டு சரிதன்மையை பரிசோதிக்க இது தயாரிக்கப்படுகின்றது | வணிகத்தின் நிதி நிலையைஅறிந்து கொள்ள, இது தயாரிக்கப்படுகின்றது |
| 2 நிலை | இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் முன், தயாரிக்கப்படுகின்றது | இருப்பாய்வு மற்றும் வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரித்தப் பிறகு தயாரிக்கப் படுகின்றது |
| 3 கட்டாயம் | இருப்பாய்வு தயாரிக்க வேண்டிய கட்டாயம் இல்லை | சில தருணங்களில், இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது |

**38. வியாபர க/கு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ.சர | | 570 | விற்பனை<br>(-) திருப் | 26200<br>60 | 26140 |
| கொள்முதல<br>(-) திருப்பம் | 15800<br>90 | 15710 | இறுதிசர | | 860 |
| மொ.இலாப | | **10720** | | | |
| | | 27000 | | | 27000 |

**39. வங்கிச் சரிக்கட்டுப்பட்டியல்**

| விவரம் | | ரூ |
|---|---|---|
| ரொக்க ஏட்டின்படி இருப்பு | | 7130 |
| **கூட்டுக** வாடிக்கையர் நேரடியாக | | 800 |
| | | 7930 |
| கழிக்க வசூலாகாத காசோலை | | 1000 |
| வங்கிஅறிக்கையின்படி இருப்பு | | **6930** |

**40. சரிகட்டுப்பதிவுகள்**

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| வாராக்கடன் க/கு ப.<br>பற்பல கடனாளி க/கு | 300 | <br>300 |

**மாற்றுப் பதிவு**

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| இலாப நட்ட க/கு ப.<br>வாராக்கடன் க/கு | 300 | <br>300 |

**இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| வாராக்கடன் | | 300 | | |

**இருப்புநிலைக் குறிப்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொறு | | | சொத்து | | |
| | | | கடனாளி | 10000 | |
| | | | (-) வாரா | 300 | **9700** |

பகுதி -ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **7x5=35**

**41.அ. கணக்கியல் சமன்பாடு**

| | ரொக் + | சரக் + | = முதல் | +கடனீ |
|---|---|---|---|---|
| தொழிதொட | 80000 | 0 | 80000 | |
| கொ | -30000 | 30000 | 0 = | |
| | 50000 | 30000 | = 80000 | |
| சம் வழங்கி | - 5000 | | - 5000 | |
| | 45000 | 30000 | = 75000 | |
| ரொ கொ | - 5000 | + 5000 | 0 | |
| | 40000 | 35000 | = 75000 | 0 |
| கூடுதல்முதல் | + 10000 | | 10000 | |
| | **50000** | **+35000** | **= 85000** | **0** |

**41.ஆ. சரிகட்டுப்பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| வாராக்கடன் க/கு ப.<br>பற்பல கடனாளி க/கு | 3000 | <br>3000 |

| | | |
|---|---|---|
| இலாப நட்ட க/கு ப.<br>வாராஜயக்கடன் க/கு | 1350 | <br>1350 |

**இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| வாராக்கடன்<br>(+)புதியவாராக் | 5000<br>3000 | <br>8000 | | |
| வாரஜயக் | | 1350 | | |

**இருப்புநிலைக் குறிப்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொறு | | | சொத்து | | |
| | | | கடனாளி | 30000 | |
| | | | (-) வாரா | 3000 | |
| | | | | 27000 | |
| | | | (-) ஜயக் | 1350 | **25650** |

**42.அ. சூர்யாவின் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| ரொக்க க/கு ப.<br>சூர்யா முதல் க/கு | 175000 | <br>175000 |
| கொள்முதல் க/கு ப.<br>X நிறுவன க/கு | 7500 | <br>7500 |
| வங்கி க/கு ப.<br>ரொக்க க/கு | 10000 | <br>10000 |
| எடுப்பு க/கு ப.<br>வங்கி க/கு | 15000 | <br>15000 |
| அலுவலக செலவு க/கு ப.<br>கொள்முதல் க/கு | 500 | <br>500 |

**42.ஆ. வங்கிச் சரிக்கட்டுப்பட்டியல்**

| **விவரம்** | | **தொகை ரூ** |
|---|---|---|
| ரொக்க ஏட்டின்படிவங்கியிருப்பு | | **10500** |
| **கூட்டுக**<br>வாடிக்கையர் நேரடியாக | | <br>1000<br>11500 |
| கழிக்க<br>ரொக் ஏட் இருமுறை பதிய<br>முன்னிலைபடுத்தாதகாசோலை<br>காசோலை கட்டணம்<br>வங்கி செலுத்திய வாடகை | | <br>5500<br>7000<br>200<br>12700 |
| வங்கிஅறிக்கையின்படி மேவப | | **1200** |

**43.அ. ப. ரொக்க க/கு வ.**

| நாள் | விவரம் | கு ப | தொ | நா | விவரம் | கு .ப | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | ரோகினி<br>முதல் க/கு<br>விற்ப க/கு | | <br>250000<br>40000<br>290000 | | கொள்<br>**இருகீஇ** | | 20000<br>270000<br><br>290000 |

**ப. ரோகினியின் முதல் க/கு வ.**

| நாள் | விவரம் | கு ப | தொ | நா | விவரம் | கு .ப | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | **இருகீஇ** | | **250000**<br>250000 | | ரொக்க | | 250000<br>250000 |

**ப. கொள்முதல் க/கு வ.**

| நா | விவரம் | கு | தொ | நா | விவரம் | கு. ப.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | ரொக்க க/கு | | 20000 | | **இருப்கீஇ** | | **20000** |

**ப. ராம் க/கு வ.**

| நா | விவரம் | கு | தொ | நா | விவரம் | கு.. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனை | | 45000 | | **இருப்கீஇ** | | **45000** |

**ப. விற்பனை க/கு வ.**

| நா | விவரம் | கு | தொ | நா | விவரம் | கு . | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | **இருப்கீஇ** | | **85000** | | ரொக்கம் | | 40000 |
| | | | | | ராம் | | 45000 |

**43.ஆ. திரு.கோபியின் தனிபத்தி ரொக்க ஏடு**

| நாள் | விவரம் | இ எ | சே எ | தொ | நாள் | விவரம் | ச எ | சே எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜீ 1 | இருப்புகீ/கொ | | | 50000 | ஜீ8 | வாடக/கு | | | 4000 |
| 14 | விற்பனைக/கு | | | 10000 | 10 | அச்சு | | | 7500 |
| | | | | | 11 | கொள் | | | 15000 |
| | | | | | 31 | **இருகீ/இ** | | | **33500** |
| | | | | 60000 | | | | | 60000 |

**44.அ. . இருப்பாய்வு**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| முதல் | | 60000 |
| விற்பனை | | 82000 |
| பெற்றதள்ளுபடி | | 3250 |
| கொள்முதல் | 58000 | |
| பொறி | 40000 | |
| விளம்பரச் செலவுகள் | 5000 | |
| மின்கட்டணம் | 800 | |
| எடுப்புகள் | 5250 | |
| வாகனச்செலவுகள் | 1200 | |
| மகிழ்வூந்து | 35000 | |
| மொத்தம் | **145250** | **145250** |

**44.ஆ.** 1.சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது – **வருவாயின வரவு**

2. வங்கியில் பெற்ற கடன் - **முதலின வரவு**
3. முதலீடு விற்பனை செய்தது – **முதலின வரவு**
4. கழிவு பெற்றது – **வருவாயின வரவு**
5. புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது – **முதலின செலவு**

**45.அ. விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | இ எண். | பே. ப.எ | விளக் | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 2018 மே2 | கரண் | | | 280X100<br>270X200 | 28000<br>54000 |
| 5 | வீரன் | | | 10X1500 | 15000 |
| 16 | ஜெயின் | | | 240X50 | 12000 |

**மொத்தம் 109000**

**விற்பனை திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | வரவுக் குறிப்பு எண். | பே. ப. எண் | தோகை ரூ |
|---|---|---|---|---|
| 2018 மே25 | கரண் | 10X280 | | 2800 |
| 27 | வீரண் | 2X1500 | | 3000 |

**மொத்தம் 5800**

**45.ஆ.** **வியாபர க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ.சர | | 900 | விற்பனை | 4000 |
| கொள்முதல் | | 2000 | இறுதிசரக் | 1030 |
| கொ ஏற்றி | | 200 | | |
| மொ.இலாபம் | | **1930** | | |
| | | 5030 | | 5030 |

**இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| கடன்மீதுவட்<br>(+) கொடு | 100<br>100 | <br>200 | மொத்த<br>இலா | 1930 |
| கொடு சம் | | 75 | வாடகை250<br>(+)பெற50 | 300 |
| **நிகர லாபம்** | | **1955** | | |
| | | 2230 | | 2230 |

**இருப்புநிலைக்குறிப்பு**

| | | | | |
|---|---|---|---|---|
| **முதல்** | --- | | இயந்திரம் | 400 |
| (+) நிகர லாபம் | 1955 | 1955 | இறுதிசரக் | 1030 |
| கடன்<br>(+)கொடு | 2000<br>100 | <br>2100 | பெறவேவாட | 50 |
| கொடுசம் | | 75 | **அநாமத்து க/கு** | **2650** |
| | | **4130** | | **4130** |

**46.அ. தேய்மானம் நீக்கவேண்டியதன் நோக்கங்கள் 1. சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய** பொருத்துகை கோட்பாட்டின்படி, ஒரு கணக்காண்டில் செய்த செலவுகளை, அந்தக் காலத்தில் ஈட்டிய வருமானத்துடன் பொருத்திப் பார்க்கப்படவேண்டும். எனவே, வணிகத்தில் வருமானத்தை பெருக்குவதற்காக சொத்துகளைப் பயன்படுத்தும் பொது, பயன்பாட்டிற்குரிய சொத்தின் அடக்கவிலை அதாவது, பயன்பாடு பெற்றதற்கேற்ப, ஏட்டின் மதிப்பில் ஏற்படும் குறைவு, வருவாயுடன் பொருத்திப் பார்க்கப்படவேண்டும். **2. உண்மையான, மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த** நிலைச் சொத்துகளின் மீது தேய்மானம் நீக்கப்படும் போது, நிலைச் சொத்தின் ஏட்டு மதிப்பு, அதன் தேய்மானத் தொகை அளவிற்கு குறைக்கப்பட்டு, மீதித் தொகை இருப்புநிலைக்குறிப்பில் காண்பிக்கப்படுகிறது. இருப்பு நிலைக் குறிப்பானது, உண்மையான மற்றும் நியாயமான நிதி நிலையை உணர்த்த வேண்டும். ஆகையால், நிலைச் சொத்துகள் அதன் குறைந்து செல் மதிப்பில் காண்பிக்கப்பட வேண்டும். **3. நிலைச் சொத்தினை மாற்றுவதற்காக** இலாப நட்டக்கணக்கில் தேய்மானம் பற்று வைக்கப்படும் போது, அதற்கு சமமான தொகை வணிகத்தில் தக்கவைக்கப் படுகிறது அல்லது வணிகத்திற்கு வெளியே முதலீடு செய்யப்படுகிறது. சொத்தின் பயனுள்ள வாழ்நாள் முடிவுக்கு வரும்போது, வணிகத்தில் உள்ள வளங்களைக் கொண்டு ஒரு புதிய சொத்து வாங்க முடியும். **4. வரிச் சலுகைகளைப் பெற** இந்திய வருமான வரிச் சட்டத்தின்படி, வணிக வருமானத்திற்கு வரி கணக்கிடும் போது தேய்மானம் வருமானத்திலிருந்து கழித்து காண்பிக்கப்பட வேண்டும். ஆகையால், வரிச் சுமையை குறைப்பதற்காக தேய்மானம் கணக்கிடப்பட்டு இலாப நட்டக்கணக்கிற்கு மாற்றப்படுகிறது. **5. சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய** வருமான வரிச் சட்டத்திற்கு மட்டுமல்லாமல், பிற சட்டத்தின் சரத்துகளை பூர்த்திசெய்வதற்காக, நிலைச் சொத்தின் மதிப்பிலிருந்து தேய்மானம் நீக்கப்படுகிறது. உதாரணமாக , இந்திய நிறுமச் சட்டம் 2013, பிரிவு 123(1) – ன்படி ஒவ்வொரு நிறுமமும், தனது பங்குதாரார்களுக்கு பங்காதாயம் அறிவிக்கும் முன் நிலைச் சொத்தின் மீது தேய்மானம் நீக்குதல் அவசியம்.

**46.ஆ.** **இயந்திர க/கு**

| நா | விவரம் | தொ | நா | விவ | தொ |
|---|---|---|---|---|---|
| 1.4.10 | வங்கி | 500000 | 31.3.11 | தேய் | 75000 |
| | | | 31.3.11 | கீ/இ | **425000** |
| | | 500000 | | | 500000 |
| 1.4.11 | கீ/கொ | 425000 | 31.3.12 | தேய் | 75000 |
| | | | 31.3.12 | கீ/இ | **350000** |
| | | 425000 | | | 425000 |
| 1.4.12 | கீ/கொ | 350000 | 31.3.13 | தேய் | 75000 |
| | **இலாபநட்** | **110000** | 31.3.13 | ரொக் | **385000** |
| | **(இலாபம்)** | 460000 | | | 460000 |

**47.அ. சில்லரை ரொக்க ஏடு**

| பெற்ற தொகை | நாள் | விவரம் | செலவழித்த தொகை | எழுதுபொரு | பயண | கூலி | அஞ்சல் |
|---|---|---|---|---|---|---|---|
| 2000 | ஜீ1 | ரொக்கம் | | | | | |
| | 7 | மடல் | 100 | 100 | | | |
| | 8 | வெள்தாள் | 50 | 50 | | | |
| | 10 | ஆட்டோ | 200 | | 200 | | |
| | 15 | கூலி | 300 | | | 300 | |
| | 18 | தபால் | 100 | | | | 100 |
| | 21 | எழுதுபொ | 450 | 450 | | | |
| | | | **1200** | 600 | 200 | 300 | 100 |
| | | கீ/இ | **800** | | | | |
| **2000** | | | **2000** | | | | |
| **800** | | இருகீ/கொ | | | | | |
| **1200** | | ரொ | | | | | |

**47.ஆ. குறிப்பேட்டுப் பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| அறைகலன் க/கு ப.<br>கொள்முதல் க/கு | 5000 | <br>5000 |
| சம்பள க/கு ப.<br>நிலா க/கு | 8000 | 8000 |
| வாடகை க/கு ப.<br>குறளமுது க/கு | 2000 | <br>2000 |
| விற்பனை க/கு ப.<br>அறைகலன் க/கு | 9000 | <br>9000 |
| கோதைமலர் க/கு ப.<br>விற்பனை க/கு | 6000 | <br>6000 |